செ.வெ.எண் : 213 நாள் : 19.04.2023

## 29.04.2023 அன்று திருநெல்வேலியில் மகளிருக்கான மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.கா.ப.கார்த்திகேயன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மகளிருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்திதரும் வகையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் மற்றும் டாடா பவர் ரென்யூவபில் எனர்ஜி நிறுவனத்தின் முழு துணை நிறவனமான டி.பி சோலார் (TP SOLAR Ltd) நிறுவனம் இணைந்து நடத்தும் மகளிருக்கான மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 29.04.2023 அன்று காலை 9 மணி முதல் பாளையங்கோட்டை சாராள் தக்கர் ( Sarah Tucker College ) கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந்த முகாமானது திருநெல்வேலி கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் உருவாகி வரும் டி.பி சோலார் (TP Solar) நிறுவனத்தின் வேலைவாய்ப்புகளுக்காக பிரத்யேகமாக நடத்தப்படுகிறது. இந்த நிறுவனம் இந்த முகாமில் 1600-க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை அளிக்கவுள்ளது. 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட 10-ஆம் வகுப்பு,12-ஆம் வகுப்பு படித்த, ITI (Fitter / Welder / Electrical / Electronics / Mechanic / COPA), பாலிடெக்னிக் ( அனைத்து துறைகளும்), B.Sc (Chemistry, Physics, Maths ),B.E (Mechanical, EEE, ECE) ஆகிய துறைகளை சேர்ந்த பட்டம் பெற்ற அல்லது இறுதி ஆண்டு மாணவிகள் பங்கேற்கலாம். இந்த முகாமில் கலந்து கொள்ள விரும்பும் பெண்கள் http://surl.li/gllsy என்ற இணைய இணைப்பில் (Google Form) -இல் தங்களது விபரங்களை பதிவிடவும். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அடுத்த 6 - 10 மாதங்களில் படிப்படியாக பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இம்முகாமில் பணிநியமனம் பெறும் பதிவுதாரர்களுடைய வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு ரத்து செய்யப்படமாட்டாது. இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தங்களது கல்வி சான்று மற்றும் இதர சான்றுகளுடன் பங்கேற்று நமது மாவட்டத்திலேயே ஒரு பெரு நிறுவனத்தில் பணிபுரியும் இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்திகொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.கா.ப.கார்த்திகேயன்,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**